பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமான
✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட் ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின் சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/.

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ் வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஆடி மீ 09 உ. ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 09 ( 24 – 07 – 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 139

## கண்டி வீதியில் மீண்டும் முகாம்கள்

### சோதனையும் தீவிரம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் புதிதாக இந்திய அமைதிப் படையினரின் முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. சோதனைகளும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

படையினரின் முகாம்கள் உள்ள அனைத்து இடங்களிலும் பஸ் பயணிகள் இறங்கிச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

கண்டி வீதியில் நேற்று வழமையை விட சோதனை நடவடிக்கைகள் மிகத் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

வாகனங்கள் அனைத்தும் மிக நுணுக்கமாக சோதனையிடப்பட்டதாகப் பயணிகள் தெரிவித்தனர். (ஒ-10)

யாழ் நகரில் நேற்று

## பொருள் வாங்குவதில் மக்கள் அவசரம்!

யாழ்ப்பாணம், ஜூலை24

ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை ஆறு மணியுடன் தளர்த்தப்பட்டதைத்தொடர்ந்துமக்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், ஏனைய பாவனைப் பொருள்களையும் கொள்வனவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டனர்.

வெள்ளிக்கிழமை அமுலான ஊரடங்கை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு ஒருவித பதற்றமான நிலையில், தமக்குத் தேவையான பொருள்களை வாங்குவதில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

யாழ் நகரப் பகுதியில் நேற்றுக்காலை 6 மணிக்கு ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகளில் ஒருவித அவசரத்துடன் ஈடுபட்டதைக் காணமுடிந்தது.

நேற்றுக் கடைகள் பலவும் ஒற்றைக் கதவில் திறக்கப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துகளும் வழமையைவிடக் குறைவாகவே காணப்பட்டன. எனினும் நகரில் சுமாரான மக்கள் நடமாட்டம் இருந்தது.

நகருக்கு வந்த பொது மக்கள் அவசர அவசரமாகத் தமது அலுவல்களைக் கவனித்து வீடுதிரும்புவதில் அவசரம் காட்டினர்.

கடைகளிலும், சந்தைகளிலும் மக்கள் முண்டியடித்துக்கொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாக இருந்தது.

நேற்று மாலையில் நகரில் சன நடமாட்டம் மிகவும் குறைந்து காணப்பட்டது. (ஒ-க-10-5)

## தடங்கல் எதுவுமின்றி நடந்த உயர்தர பரீட்சை

யாழ்ப்பாணம் ஜூலை 24

நேற்றுக்காலை ஆரம்பமான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எதுவித தடங்கலும்இன்றி அமைதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றது.

இத்தகவலை யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஏற்கெனவே திட்டமிட்டபடி 62 பரீட்சை நிலையங்களிலும் பரீட்சைகள் நடைபெற்றன. கணக்கியல், பௌதிகவியல் ஆகிய பாடங்களுக்கான பரீட்சை நேற்றுக்காலையிலும் விவசாயப்பாடம் மாலையிலும் நடைபெற்றன.

நேற்றுக்காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து போக்குவரத்துக்கள் சீராகின. அதனால் மாணவர்கள் சிரமம் எதுவும் இன்றிப் பரீட்சை நிலையங்களுக்குச் சமுகமளிக்கக்கூடியதாக இருந்தது.

இன்று ஞாயிற்றுக்கிழமை ஆனையினாலும், நாளை திங்கட்கிழமை விடுமுறைத்தினம் ஆனையினாலும் பரீட்சை நடைபெறாது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறும் என்று அவர் மேலும் கூறினார். (ஒ-5)

சுபநேரம்
24 - 7 - 1988
ஆடி - 09
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
09-02முதல் 10-32வரை
ராகுகாலம்:
04-32 முதல் 06-02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## இன்று புலமைப் பரிசில் பரீட்சை

யாழ்ப்பாணம் ஜூலை 24

ஆறும் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை திட்டமிட்டபடி நடைபெறும்.

பரீட்சை தடைஇன்றி நடப்பதற்கான ஒழுங்குகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் கூறினார். (ஒ-5)

# திருமலைபட்டினத்தில் முழுநாள் ஊரடங்கு

## இனக்கலவரம் மூளும் அபாயத்தைத் தடுக்க

கொழும்பு, ஜூலை 24

திருகோணமலைப் பட்டினப் பகுதியில் நேற்று முழுநாள் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

இந்தப் பகுதியில் இனக்கலவரம் மூளும் அபாயத்தைத் தடுப்பதற்கு முன்னேற்பாடாகவே ஊரடங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை நகரை உள்ளடக்கிய உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே முழுநாள் ஊரடங்கு நேற்று அமுல் செய்யப்பட்டது.

இந்தப் பகுதியிலேயே கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வன்செயல்களின்போது சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் கொலையுண்டனர்.

இனரீதியான வன்செயல்கள் மேலும் தீவிரமாகலாம் என்பதாலேயே நேற்று முழுநாள் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதாக அறியவந்தது.

முழுநாள் ஊரடங்கு மறுஅறித்தல்வரை தொடர்ந்து இருக்கும் எனவும் அறியவருகிறது.

திருமலை மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் ஊரடங்குச்சட்டம் இரவு 7 மணி முதல் காலை 5 மணிவரை அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆனால் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகள் வழமைபோல் நடைபெறும் என்று கூட்டுப்படைத் தலைமையலுவலகம் நேற்று அறிவித்தது.

பரீட்சை எடுக்கும் மாணவர்கள், மேற்பார்வை அதிகாரிகளுக்கு ஊரடங்குச் சட்ட பாஸ்கள் வழங்சப்படும்.

பாஸ்களைப் பெறுவதற்காக அவர்கள் இலங்கை இராணுவ முகாம்கள், இந்திய அமைதிப்படை முகாம்கள், பொலீஸ் நிலையம் ஆகியவற்றை நாடும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

முந்தி வந்த செய்தி

திருகோணமலையில் தொடர்ந்து பதற்றம் நிலவியதாக முதலில் (6ஆம் பக்கம் பார்க்க)

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



மெத்த நல்லது. பரீட்சை கன்னாறு இல்லாமல் நல்லபடியாக நடந்து முடியவேணும் எண்டதுதான் எங்கடை வேண்டுதலும்..!

## டாங்கிகள், டிரக்குகள் அங்கே விரைகின்றன

ஒட்டுசுட்டான், ஜூலை 24

வவுனியா வடக்கு, புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் முகாமிட்டிருக்கும் இந்திய அமைதிப் படை முகாம்களுக்குப் பெரும் எண்ணிக்கையான டிரக்குகளும், டாங்கிகளும் வந்து சேர்ந்துள்ளன.

இதேவேளை பெருந்தொகையான உணவுப் பொருள்களும் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவை குறித்து மக்கள் பலவாறாகப் பேசிக்கொள்கிறார்கள். (ஒ-113)

## ஓய்வூதிய வேலைகளை ஏனைய பிரிவு ஊழியரைக் கொண்டு செய்விக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் ஜூலை 24

இம்மாதம் முடிவதற்கு முன்னரே ஓய்வூதியக் கொடுப்பனவுகளை அனுப்பி முடிக்க யாழ். செயலகத்தில் நேற்று முதல் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியத்துடன் சம்பந்தப்பட்ட செயலக வட்டாரங்கள் இதனை உதயனுக்குத் தெரிவித்தன.

அதே வட்டாரங்கள் இதுபற்றி மேலும் தகவல் தருகையில் தெரிவித்ததாவது:-

செயலகம் இயங்க அனுமதிக்கப் பட்டிருக்கும் காலப்பகுதியில் இம்முறை விடுமுறைகள் அதிகமாக இருந்தமையினால் ஓய்வூதியம் விநியோகிப்பது சாத்தியமற்றதாக இருந்தது (இது சம்பந்தமாக நேற்றைய சஞ்சிகையில் செய்தி ஒன்று வெளியாகி இருந் (6 ஆம் பக்கம் பார்க்க)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தம் வந்து ஒரு வருடமாகியும் வதை முகாம்களில் இன்றும் எம்மவர்!

### வேதனைக்குரியது என்கிறது ஈரோஸ்

யாழ்ப்பாணம், ஜூலை24

''இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு ஓராண்டு நிறைவுறும் இத் தருணத்திலும் கூட, வெலிக்கடை போன்ற வதை முகாம்களில் எம்மவர்கள் வாடுகின்றமை வேதனை தரும் நிகழ்ச்சியாகும்''

வெலிக்கடைப் படுகொலையின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி ''ஈரோஸ்'' இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

''கறுப்பு ஜூலை''யின் கொடூரம்மிகுந்தவெலிக்கடைப்படுகொலைகளின் ஐந்தாவது நினைவுகளைச் சுமந்து முன்செல்வோம். சிறிலங்கா அரசானது தமிழ் பேசும் மக்களை அழித்தொழிப்பதே தன் முடிந்த முடிபு என்பதை செயலில் காட்டத் தொடங்கிய ஆரம்பப் புள்ளியே வெலிக்கடைப் படுகொலைகளாகும். அடிப்படை மனித உரிமைகளுக்கும், மனித நாகரிகத்திற்கும் புறம்பாக நிகழ்த்தப்பட்ட வெலிக்கடைப் படுகொலைகளால் 53 போராளிகளை இழக்க நேரிட்டமை துயரத்தைத் தருவதாகும்.

இன்றும் சிறிலங்காச் சிறைகளில் பாதுகாப்பு உத்தரவாதமற்று வாடும் எம்மவர்களை விடுவிக்கத்தானும் உரிய நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்காமல் சிறிலங்கா அரசின் கபடத்தனமான வழிகாட்டலுக்கு ஆளாகி தேர்தலைத் திணிப்பதிலேயே இந்திய அரசு குறியாக இருக்கின்றமை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலுக்கு ஒப்பானதாகும்.

கொடூரம் மிகுந்த ''கறுப்பு ஜூலை'' யில வெலிக்கடைப் படுகொலையின் ஐந்தாவதுநினைவு தினத்தை ஒட்டி பொது மக்கள் அனைவரும் இது வரை இழந்த அனைத்துப் போராளிகளின் பெயராலும் உறுதிபூண வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## குடாநாடு முழுவதிலும் கிளிநொச்சியிலும் ஊரடங்கு: மாலை 6மணி— காலை 6மணி

யாழ்ப்பாணம் ஜூலை 24

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய அமைதிப்படை அறிவித்திருக்கிறது.

ஆனால் பிரஸ்தாப ஊரடங்கு நேரம் எத்தனை நாட்களுக்கு அமுலில் இருக்கும் என்பது குறித்து எவ்வித விளக்கமான தகவல்களும் இல்லை.

இதேவேளை மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இரவு 8 மணி முதல் காலை 5 மணிவரையும்—

திருமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இரவு 7 மணி முதல் காலை 5 மணிவரையும் – ஊரடங்கு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது. (அ-எ)

## வெலிக்கடை படுகொலைகள் நினைவாக நாளை ஹர்த்தாலுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 24

நாளை திங்கட்கிழமை வடக்கு, கிழக்கு எங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வெலிக்கடை சிறையில் 1983 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட தங்கத்துரை, குட்டிமணி உட்பட 53 பேரின் 5 ஆம் ஆண்டு நினைவுதினத்தை நாளை திங்கட்கிழமை நினைவு கூருவோம்.

இவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக எதிர் வரும் 26, 27, 28 ஆகிய மூன்று தினங்களிலும் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு கொண்டாட்டங்களைத் தவிர்த்து துக்கம் அனுஷ்டித்து எமது அஞ்சலியைச் செலுத்துவோம் – என்று கூறப்பட்டுள்ளது.

## துக்க தினம் அனுஷ்டிக்க கம்யூ. கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை24

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகளின் ஐந்தாவது வருட துயர நினைவை, நாளை திங்கட்கிழமை துக்க தினமாகக் கொள்ளுங்கள்; அனுஷ்டியுங்கள்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வெளியிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றில் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உலகப் பாசிச வெறியர்கள் கூடச் செய்வதற்குப் பின்நிற்கும் வெலிக்கடைச் சிறைப் படுகொலைகளைப் பற்றி இன்றுவரைஜனநாயகம் சுதந்திரம், தருமம் பற்றிப் பேசிவரும் யூ என். பி. பேரினவாத அரசு ஒரு சிறு விசாரணை கூட நடத்தவில்லை.

இன்றைய துன்பம் நிறைந்த அன்றாட நிகழ்வுகளுக்கு வழி வகுத்துச் சென்ற அந்தத் துயரமும் கொடூரமும் நிறைந்த நாட்களைத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று அந்தப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-5)

### வடமராட்சியில்

யாழ்ப்பாணம் ஜூலை 24

வெலிக்கடைப் படுகொலைகளின் ஐந்தாவது வருட நினைவையொட்டி நாளை திங்கட்கிழமை வடமராட்சிப் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்க ஏற்பாடாகியுள்ளது.

வடமராட்சியில் வர்த்தகர் சங்கமும், மினிபஸ் போக்குவரத்துச் சங்கமும் இப்படித் தீர்மானித்திருப்பதாகத்தெரியவருகிறது. (ஒ-க-160)

## மிதி வெடியில் காலை இழந்த சிறுவன்

வடமராட்சி, ஜூலை 24

மிதிவெடி வெடித்ததனால் ஆறு வயதுச் சிறுவன் தனது கால் ஒன்றை இழந்தான். அவனது இரண்டு கண்களும் மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை பருத்தித்துறையில் வருத்துப்பளை என்னும் இடத்தில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

பரிமேலழகர் பிரசாத் என்ற சிறுவன் வீட்டுக்கருகில் மிதிவெடி வெடித்ததனால் காயங்களுக்கு இலக்கானான். உடனே மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டான். அங்கே கால் ஒன்று அகற்றப்பட்டது.

தற்போது இச் சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ஒ-5-160)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

English Electric Type writer Silver Reed, Hardly Used, சுந்தோர் பாவனைகளுக்கு உகந்தது, விற்பனைக்குஉண்டு. 372, பருத்தித் துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (5126)

101 ஸ்ரீ தொடர் இலக்கமுள்ள புதிய MD 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; செ. நித்தியானந்தன், மணிமண்டபம், நவாலி தெற்கு, மானிப்பாய். (5128)

Cull Birds முட்டை இட்டு இளைத்த இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் தரப்படும். Nallur Farm Centre, C/o Nallur Video Centre, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (5068)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள், Box Spring கட்டில், கட்டில் மெத்தைகள், Show Case அலுமாரி, மேசைகள் சிறிய பெரிய கபேட், கண்ணுடி மேசை, மகாராஜா ஹோல் செற், செற்றிகள் மற்றும் பல மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக் சந்தியருகில்.) (5093)

GOLDI Sausages எல்லாவகையான Sausages மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C.5624]

### WALL PAPER FOR SALE

உயர்ந்த ரக இத்தாலிய நாட்டு (Italy) சுவருக்கு ஒட்டும் வர்ணகடதாசிகள் இரண்டு டிசைன்களில் விற்பனைக்குண்டு. கழுவிப்பாவிக்கக் கூடியவை. விபரங்கட்கு T. ஞானகுரு, 104/4, அத்தியடி குறுக்கு வீதி, அத்தியடி. யாழ்ப்பாணம். (C 5908)

### மோட்டார் சைக்கிள் விற்பனை

நல்ல நிலையிலுள்ள ஹொண்டா C B 125 (Sports Model) மோட்டார் சையிக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: S. சுப்பிரமணியம்அன் கொம்பனி, 34, ஆடியபாதம் ரோட், நல்லூர். (5385)

### மோட்டார் சைக்கிள் T. V விற்பனை

N. C 50 Honda மோட்டார் சைக்கிள் (லேடீஸ் மொடல்), பிலிப்ஸ் T. V (Black & White) 22''; குறுண்டிக் கலர் T. V 26''; ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு விலாசம்:- M. P. பஞ்சலிங்கம், 45, விபுலானந்தர் வீதி, (புங்கங்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (5384)

### செங்கை ஆழியான் நாவல்கள்

மழைக் காலம், தீம் தரிகிடதித்தோம், கடல் கோட்டை, அக்கினிக் குஞ்சு, ஓ, அந்த அழகிய பழைய உலகம், கிடுகு வேலி, நடந்தாய் வாழி வழுக்கியாறு விற்பனையாகின்றன. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கிளிநொச்சியில் பிக்பென் / லங்கா புத்தகசாலைகள். (5105)

### வயற்காணி விற்பனை

சுன்னாகம் - கந்தரோடை வீதியில், (சுன்னாகம் சந்தியில் இருந்து ¾ மைல் தூரத்தில்) வீதியோரமாக, 40 பரப்பு வயல்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு விலாசம்; தி. திருச்சிற்றம்பலம், ''யோகா போட்டோ'' யானைக்குட்டி ஒழுங்கை, தெல்லிப்பளை. (5380)

## கோழிக்குஞ்சு

Prima Lohmann வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு சேவல் குஞ்சுகள் Hy-Line வெள்ளை கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன்முன்கூட்டியே பதிவுசெய்யவும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (C5626)

பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் புரோயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன் கொக்குவில். மயூரா பாம விற்பனை நிலையம் முன்பாக சாவகச்சேரி, மகேஸ்வரி ஹோட்டல் முன்பாக கரடிப்போக்கு பாலத்தடி. கிளிநொச்சி. (4885)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி 5625)

### இலங்கைப் புவியியல்

A/L வகுப்புக்குரிய இலங்கைப் புவியியல் வெளிவந்துவிட்டது. அபிவிருத்திப் புவியியல், எறியங்கள் என்பனவற்றின் புதிய பதிப்புகள் விற்பனையாகின்றன. ஆக்கியோன்: க. குணராசா M. A. பிரபல புத்தகசாலைகளில்கிடைக்கும். (5104)

### 88 Dec. English New Syllabus

ஆங்கிலம் புதிய பாடத்திற்கமைய நாலு மாத பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 27-7-88 நேரம் மாலை 6. 30-7.30 நாட்கள்: செவ்வாய், புதன், வியாழன், S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (5119)

### தேசிக்காய் தேவை

நன்கு முற்றிப்பழுத்த எலுமிச்சம்பழம் தொகையாக உடனடியாகத் தேவை. அத்துடன் எலுமிச்சை இனத்தைச் சார்ந்த கொடி; சிதம்பர; லெமன்; புளிப்புத் தோடை; நாரத்தங்காய் வகைக் காய்களும் நல்ல விலையில் வாங்கப்படும். தொடர்பு:-ந. கந்தசாமி 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C/5916)

### அச்சகத் தொழிலாளர் தேவை

பிளேட்டின் மெஷினில் அச்சிடும் அனுபவம் வாய்ந்த மெஷின் மன் (சிலிண்டர் மெஷினிலும் அச்சிடக்கூடியவராயின் நல்லது) ஒருவரும்; மெஷினில் அச்சிடும் வேலைபயிலுனர் ஒருவரும் தேவை. நேரில் வரவும். ஆனந்தா அச்சகம் 226, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (C/5850)

## தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கிலத்தில் கணக்கு எழுதக் கூடிய (வருமான வரிக் கணக்குகள் உட்பட) கணக்காளர் (Book-Keeper) தேவை. பத்து வருட அனுபவம்வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கவும். 289, C/O உதயன் யாழ்ப்பாணம். (5377)

### மணமகன் தேவை

நற்பண்பும் மிகுந்த அழகும் கல்வியறிவும் உடைய உயர் சைவ வேளாள குல பெண்ணுக்கு உயர் பதவி வகிக்கும் ஏறக்குறைய 39 வயதுடைய மணமகன் தேவை. போதிய சீதனம் வழங்கப்படும். 37 வயதுடைய உயர் பதவி வகிக்கும் மணமகனுடனும் மாற்றுச் சம்பந்தமும் செய்யலாம். சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். இல 301 C/o உதயன் யாழ்ப்பாணம். (5382)

Jaffna Vellala Hindu Parents in Colombo Seek for Only Daughter 39 Years, Dowry House in Colombo Land in Jaffna cash Local or Foreign currency and Jewellery Send Horoscope with Details No 300 C/o Uthayan, Jaffna. (5381)

### மணமகள் தேவை

யாழ். இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 33 வயதுடைய தாரமிழந்த (ஒரு ஆண்[6] ஒருபெண் [7] குழந்தைகளுடைய) மணமகனுக்கு மணமகள் தேவை. முன்பு அரசாங்க ஒப்பந்தகாரர் ஆகவும் தற்பொழுது சவூதி அரேபியாவில் உணவுச் சாலைப் பொறுப்பதிகாரியாகவும் கடமைபுரிகின்றார். உடன்தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:- 288, C/o உதயன், யாழ்ப்பாணம் (5374)

### சிங்கப்பூருக்கு பணிப்பெண்கள் தேவை

சிங்கப்பூருக்கு பணிப் பெண்கள் தேவை. சம்பளம் 3000/- வழங்கப்படும். வயது 20 முதல் 35 வரை. பாஸ்போட் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். முதல் இரண்டு வருடமும். தேவைப்படும் பொழுது 4 வருடங்களுக்கு நீடிக்கலாம். தொடர்பு:- S. யோகரட்ணம், 96, ஆடியபாத வீதி, கேணியடி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. (5386)

### வெல்டர் தேவை

கேற் (Gate) கிறில் வேலை செய்யக்கூடிய நன்கு அனுபவம் உள்ள வெல்டர் தேவை. நன்கு அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். சம்பளம் நேரில் கதைத்துத் தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு: K. றூபலிங்சம், அத்தியடி புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (C5909)

### ஒலிப்பதிவாளர் தேவை

ஒலிப்பதிவு செய்வதற்கு அனுபவமுள்ள ஆண்கள் தேவை. நேரில் வரவும். தொடர்பு:- S. சிறிதரன்; 18, சீனிவாசன் வீதி கொட்டடி, யாழ்ப்பாணம். (5371)

### Stewards தேவை

யாழ் / நகரில் அமைந்துள்ள 'Old Park Chinese Restaurant'' க்கு Stewards தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும் தொடர்பு:- ''Old Park ChinseRestaurant'' 207, Old Park Road, Jaffna (C 5821)

### கிருஷ்ண தொண்டு

ஆச்சிரமத்தில் இருந்து பகவான் கிருஷ்ணாவின் தொண்டுகளில் ஈடுபட்டு வாழ விரும்புபவர்கள் விண்ணப்பிக்கவும். சிறுவர், சிறுமிகளும் சேர்ந்து கொள்ளலாம். உணவு, உடை, கல்வி, இருப்பிடம் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும். ஹரேகிருஷ்ண 188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13. (5387)

### TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna. Samy & Co Shabra அருகாமையில் (C5300)

### போட்டிப் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை 01-08-1988 காலை9-00மணிக்குநடைபெறும். விண்ணப்ப முடிவுத் திகதி 25-07-1988 Modern Education Centre, Karaveddy. (4950)

## கல்வி

ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தரின் வீடுகளில் ஆங்கிலம் கற்பிக்கப்படும். தொடர்பு: ஜெயம் 66/10 கந்தர் மடம், யாழ்ப்பாணம். (5087)

## நெடுந்தீவுக்கு உணவு முத்திரை

நெடுந்தீவு ஜூலை 24

நெடுந்தீவு கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு வழங்கவென இன்னும் சில தினங்களில் உணவு முத்திரைகள் இங்கு வந்து சேருமெனத் தெரிகிறது.

நெடுந்தீவுப் பகுதிக்கு இதுவரை வழங்கப்பட்ட முத்திரைகளுடன் புதிதாக வழங்கப்படவேண்டியதும் சேர்ந்து சுமார் 4500 உணவு முத்திரைகள் இம்முறை விநியோகிக்கப்படும். (இ-111)

## திருடர் நடமாட்டம்

கொடிகாமம் ஜூலை 24

தென்மராட்சி கிழக்குப்பகுதியான மீசாலை, கொடிகாமம் பகுதிகளில் இரவில் திருடரின் நடமாட்டம் அதிகரித்து வருகின்றது. (இ-75)

## AIR CONDITIONER FOR SALE

Air conditioner '' WEATHERITE '' 12,000 B.T.U. with '' STAVOL '' automatic stabiliser Servo Type - S. V. C. 3000, in put 160 V - 250 V, out put 220V, little used and well maintained.

Contact:

**No. 29, 2nd Cross Street, Jaffna.**

(5107)

எமது புதிய வெளியீடு

உஷா சினிமா

உங்கள் ✶ சத்தியராஜ் ✶ அமலா நடித்த

## ஜீவா

RECORDING ஒடருக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(5127)

## விற்பனைக்கு

27ஸ்ரீ என்னும் தொடர் இலக்கமுடைய லெயிடன் பொக்சர் 2½ கியூப் கொள் அளவுடைய டிப்பர் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

வி. கனகசபாபதி

**ஈஸ்வரி கிரேசர்**

மானிப்பாய் ரோட், கைதடி மேற்கு, கைதடி.

(5125)

## DIPLOMA IN PHARMACY

புதிய பாமஸி பயிற்சி நெறி

ஆரம்பம் 30 - 07 - 1988

உங்கள் பதிவுகட்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St.Peters Lane, JAFFNA.

(C 5880)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**திரு. பொன்னையா இராஜசிங்கம்**

பிறப்பு: 17-11-1921 இறப்பு: 05-08-1987

''கருணையோடு எம்மை வளர்த்த தெய்வத்தின் திருவடிக்கு எமதுமலர் அஞ்சலிகள்''

மனைவி, மக்கள், மருமகள், உறவினர்.

10, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (5129)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னையா சிவானந்தன்**

முகாமையாளர்

(ஆனந்தன், ரதிவோச் வேக்ஸ்)

பிறப்பு: 13-02-1934 இறப்பு: 24-07-1983

திதி: 28-07-1988

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எங்கள் எல்லோரையும் பெருமை கொள்ளச் செய்துவிட்டு அரக்கர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்ட எம் அன்புச் செல்வமே! உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் வாடும்

அன்பு மனைவி,

பிள்ளைகள்:

நிஷாந்தி, பிரசன்னு, சிந்துஜா.

''நிஷாந்தி வாசா''

131/1, பலாலி ரோட், திருநெல்வேலி. (5275)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



எஸ். சரவணமுத்து

தோற்றம்: 19-04-1901

மறைவு: 24-07-1983



சு. கலாபரமேஸ்வரன்

தோற்றம்: 02-08-1944

மறைவு: 24-07-1983

திதி: 29-07-1988

தங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:


மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மனைவி, மக்கள், தந்தை, சகோதரர்கள், மைத்துனர், மைத்துனியர்.

'இலக்குமி பதி', பலாலி வீதி, திருநெல்வேலி.

(சி-5912)

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



**மஜீத் முஹம்மது நமீஸ்**

(வெள்ளை)

மலர்வு: 4. 11. 1967 உதிர்வு: 23. 07. 1986

உன் பிரிவால் வாடும்

தாய், தந்தை, சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(5276)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் வாழ்த்து



யாழ்ப்பாணம், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, நல்லூரைச் சேர்ந்த

K. வேதாரணியம் -V. கமலாதேவி தம்பதிகளின் புதல்வன்

**செல்வன் V. சஜீவன்**

தனது மூன்றாவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார். இவரை அக்கா V.சகிலாவும் மற்றும் உறவினர்களும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (5262)


# ஈரப்பெரியகுளம் பகுதியில் கொள்ளையர் 'தர்பார்' நீடிப்பு

## பயணிகளை பீதிக்குள்ளாக்கும் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

கடந்த சில நாட்களாக ஈரப்பெரியகுளத்துக்கு அண்மித்த பகுதிகளில் கொள்ளையர்களின் 'தர்பார்' அதிகரித்து வருகிறது.

சமீப நாட்களில் பல பஸ்கள் வழிமறிக்கப்பட்டு பயணிகளின் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

பஸ்கள் கொள்ளையிடப்படுவதற்கு முன்னர் கொள்ளையர்கள் வீதியில் தடைகளைப் போடுகின்றனர்.

சாரதிகளின்சாதுரியத்தால் பஸ்கள் தடைகளைத் தாண்டி வந்த சம்பவங்களும் உண்டு.

அவ்வாறு தப்பி வந்த பஸ் ஒன்றின் பிரயாணி தெல்லிப்பளையைச் சேர்ந்த எஸ். முகிலன் என்பவர் தம் அனுபவத்தை உதயன் செய்தியாளருக்கு விவரித்தார்.

அவர் கூறியதாவது.-

கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை நான் கொழும்பிலிருந்து ஒரு தனியார் பஸ் மூலம் யாழ் திரும்பிக்கொண்டிருந்தேன்.

அதிகாலை 4 மணி அளவில் எமது பஸ் மதவாச்சி பரிசோதனை நிலையத்தைத் தாண்டி சொற்பதூரம் வந்திருக்கும்.

அவ்வேளை மதகு ஒன்றுக்கு மத்தியில் லொறி ஒன்று வீதியை வழிமறித்தபடி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

வழமையாக இந்தச் சேவையில் ஈடுபட்டு அனுபவம் பெற்றிருந்த சாரதிக்கு நிலைமை விளங்கி விட்டது. எனவே பஸ்ஸின் வேகத்தை அதிகப்படுத்தினர்.

எமக்கோ நிலைமை விளங்காத போதிலும் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறதுஎனத்தெரிந்து விட்டது.

நான் எனது இஷ்ட தெய்வமான பகவான் பாபாவை நினைத்துக் கொண்டேன்.

எமது பஸ் பயங்கர வேகத்தில் லொறியை அண்மித்தது. ஒரு பக்கம் மதகு. வீதிக்கு குறுக்கே லொறி, மறு பக்கத்தில் பள்ளம். இந் நிலையில் சாரதியின் வேகம் எம்மை பயம் கொள்ள வைத்தது.

பயங்கர வேகத்தில் லொறியை அண்மித்தது எமது பஸ். நான் கண்ணை மூடிக் கொண்டேன்.

சாரதியோ லொறியை மோதுவதுபோல் சென்று திடீரென பள்ளம் பக்கமாகத் திருப்பி மிகச் சாதுரியமாக பள்ளத்தை கடந்து லொறியைத் தாண்டினர்.

அந்த வேளையில் காட்டுப் பகுதியில் இருந்து சிலர் எமது பஸ்ஸை நோக்கி ஓடி வந்தனர்.

ஆனல் அவர்கள் எமது பஸ்ஸை அண்மிக்க முன்பு எமது பஸ் அவர்களைக் கடந்து விட்டது.

ஆனலும் கொள்ளையர்கள் விட்டபாடில்லை. தொடர்ந்து ஒரு சிறு வாகனத்தில் எம்மைத் துரத்த ஆரம்பித்தனர். இருட்டில் அந்த வாகனம் என்ன என்று எமக்குத் தெரியவில்லை. ஆனல் இரண்டு வெளிச்சங்கள் மட்டுமே தெரிந்தன,

தொடர்ந்து எமது சாரதி வேகமாக பஸ்ஸைச் செலுத்தி வந்து ஈரப்பெரிய குளம் முகாமை அண்மித்ததும் எம்மைத் துரத்தி வந்த வாகனம் திரும்பிச் சென்று விட்டது.

பின்னர் நாம் வவுனியாவை அடைந்துஅங்கே ஊரடங்கு தளர்த்தப்படும் வரை காத்திருந்தோம்.

அங்கு நின்ற பஸ்களுடன் நாமும் சேர்ந்து கொண்டோம். எப்படித் தப்பினீர்கள்? என்று அங்கு நின்ற மினிபஸ் காரர்கள் எங்களைக் கேட்டனர். அவர்களுக்கும் அதே அனுபவம் தான்.

இதன் பின்னர்கொள்ளையர்கள் உஷார் அடைந்து வீதித் தடைகளைப் பலப்படுத்தி விட்டதாகவும், எமக்கு பின்னல் வந்த பஸ்கள் பல கொள்ளையிடப்பட்டதாகவும் அறிந்தோம்.

பின்னர் யாழ் வந்து சேர்ந்ததும் எமது சாரதியைப் பாராட்டியதுடன், சிறு அன்பளிப்பு ஒன்றையும் வழங்கினேம்.

ஆனல் சாரதியோ அதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.

இவ்வாறு அவர் தமது அனுபவத்தை விவரித்தார். (இ-9)

## தோட்டங்களில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, ஜூலை 24

தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடும் என்றுகருதப்படும் தோட்டப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதில் மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## 29இல் ரூபவாஹினி உரை

யாழ்ப்பாணம், ஜூலை24

இலங்கை-இந்திய ஒப்பந்தம் அமுல் செய்யப்பட்ட ஒரு வருடம் நிறைவு தினமாகிய இம் மாதம் 29ஆம் திகதி ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்களில் ஒருவரான திரு. எஸ். வரதராஜப் பெருமாள் ரூபவாஹினியில் உரையாற்ற ஏற்பாடாகி உள்ளது. (அ-21)

# கால்களை இழந்தவர்களுக்கு சக்கர நாற்காலிகள்

## செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும்

யாழ்ப்பாணம் ஜூலை 24

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினல் இரண்டு கால்களையும் இழந்த இளைஞர் யுவதிகளுக்கு சக்கர நாற்காலிகளை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் இலவசமாக வழங்கவுள்ளது.

இவ்வாறு யாழ் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினல் பல இளைஞர், யுவதிகள் தமது கால்களை இழந்தனர்.

இதன் காரணமாக இவர்கள் தமது நாளாந்த அலுவல்களைக் கவனிக்க முடியாதுள்ளது.

இவர்களின் இந்தக் குறைபாட்டை போக்கவே சக்கர நாற்காலிகளை வழங்க நாம் முன்வந்துள்ளோம்.

எனவே தமது இரண்டு கால்களையும் இழந்த இளைஞர் யுவதிகள் தங்கள் விண்ணப்பங்களை எமது பரிசிலனைக்கு அனுப்பி வைத்தால் நாம் தேர்ந்தெடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கமுடியும்.

இவ்வாறு அந்த அதிகாரி மேலும் கூறினர். (ஒ-5)

## டாக்டரைக் காருடன் காணவில்லை

கொழும்பு, ஜூலை 24

ஸ்ரீலங்கா வைத்தியர் சங்கத்தின் உறுப்பினரான டாக்டர் அத்துலசுமதிபாலாவை அவரின் காருடன் காணவில்லை என்று முல்லேரியாப் பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

சென்ற செவ்வாய்க்கிழமையில் இருந்து காணமற் அவர் போய் விட்டார். (ஒ-எ)

# நெடுந்தீவுச் சேவைக்கு மேலும் இரு படகுகள்

நெடுந்திவு, ஜூலை 24

நெடுந்திவு கடற் போக்குவரத்துச் சேவைக்கென நெடுஞ் சாலைகள் திணைக்களம் புதிய இயந்திரப்படகுகள் இரண்டைக் கட்டுவிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கென கொழும்பு டொக்யாட் நிறுவனத்துடன் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் நவீன வசதிகள் கொண்ட இரு இயந்திரப் படகுகளை இரும்பினல் வடிவமைக்கும் வேலைகளில் டொக்யாட் விரைவில் ஈடுபடலாமெனவும் பெரும்பாலும் இன்னும் ஆறு மாதங்களுள் குறிப்பிட்ட படகுகள் உருவாக்கப்பட்டு விடலாமெனவும் கூறப்படுகிறது. (இ-111)

## தமிழகப்படகு நெடுந்திவில் ஒதுங்கியது

தமிழ் நாடு இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற படகு ஒன்று கடல் காற்றினல் அடித்துச் செல்லப்பட்டு நெடுந்தீவு வெள்ளைக் கடற்கரையில்பாறையில் மோதித் தரை தட்டியது.

படகில் வந்த மீனவர்களான மிக்கேல்தாசன் (வயது 33) அந்தோனி அடிமை (30 வயது) ஆவேல் (40 வயது) ஜெயசிலன் (29வயது) சேகரன்( 29 வயது) ஆகியோர் எவ்வித கஷ்டமுமின்றிக் கரையில் இறங்கினர். (இ-111

# யாழ். இந்துவிலிருந்து 24 மாணவர்கள் பொறியியல் பீடத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து 24 மாணவர்கள் பொறியியல் பீடத்திற்கு அனுமதி பெற தகுதி பெற்றுள்ளனர்.

பௌதிக விஞ்ஞான பீடத்திற்கு 23 மாணவர்களும், விவசாய விஞ்ஞான பீடத்திற்கு 4 மாணவர்களும், மருத்துவ பீடத்திற்கு 4 மாணவர்களும்,உயிரியல் பீடத்திற்கு 3 மாணவர்களும், முகாமைத்துவ, கலைப் பீடங்களுக்கு தலா ஒவ்வொரு மாணவனும் அனுமதி பெற தகுதி பெற்றுள்ளனர்.

உயிரியல் விஞ்ஞான பாடங்களில் எம். குருபரன் மொத்தம் 329புள்ளிகளையும், பௌதீக விஞ்ஞானப் பிரிவில் பி. பாலகுமாரன், என். கதிர்காமநாதன், எம். ரவிக்குமார் ஆகியோர் முறையே 351, 332, 319 புள்ளிகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இருந்து இரண்டு மாணவிகள் மருத்துவ பீடத்திற்கு அனுமதி பெற தகுதி பெற்றுள்ளனர்.

கலைப்பீடத்திற்கு 10 மாணவிகளும், உயிரியல் விஞ்ஞான பீடத்திற்கு 3 மாணவிகளும், வர்த்தக பீடத்திற்கு 2 மாணவிகளும் அனுமதி பெற தகுதி பெற்றுள்ளனர். (ஒ-க)

## மீன் பிடி இயந்திரங்கள் திரும்ப ஒப்படைப்பு

முல்லைத்தீவு ஜூலை 24

முல்லைத்தீவு அளம்பில் கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவைச்சேர்ந்த தூண்டாய்ப் பகுதி மீனவர்கள் 9 பேரிடமிருந்து. கைப்பற்றப்பட்ட மீன்பிடி இயந்திரங்கள் முல்லைத்தீவு மாவட்டப் பிரசைகள் குழுச்செயலாளர் திரு. க. கதிரவேலுவின் முயற்ச்சியால் திருப்பி ஒப்படைக்கப்பட்டன. (இ-92)

## வடமராட்சி கிழக்கு பஸ் சேவை பற்றி அதிருப்தி

வடமராட்சி ஜூலை 24

வடமாரட்சிகிழக்குக்கு தினம் ஒரு பஸ் மட்டும் சேவையில் ஈடுபடுகிறது.

இதனல் வெளியில் இருந்து அங்கு சென்று சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களும் மாணவர்களும்.ஆசிரியர்களும் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். (இ-160)

## யாழ். தபால் அத்தியட்சகர்

மட்டக்களப்பு மாவட்ட தபால் அத்தியட்சகராக கடந்த 4 வருடங்களாக கடமையாற்றிய திரு. கே. கனகசுந்தரம் யாழ்மாவட்ட தபால் அத்தியட்சகராக இடமாற்றம் பெற்றுள்ளார். (இ-21)

# இன, மத, பேதமின்றி அளப்பரிய சேவை

## மன்னர் ஆயர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 24

"மன்னர் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் சகல இன. மதத்தவர்களுக்கும் அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளது. இச்சங்கத்தினல் நிறைவேற்றப்பட்ட விதவைகள் மறுமலர்ச்சித் திட்டம், கல்வி ஊக்குவிப்புத் திட்டம், விவசாயிகள் நற்செய்கைத் திட்டம், மீனவர்கள் புனர்வாழ்வுத்திட்டம், வைத்தியசேவை போன்றவை பாராட்டுக்குரியவை."

மன்னர் அல் அஸ்ஹர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பிரஸ்தாப சங்கத்தின் கூட்டத்தில் பேசிய மன்னர் மறைமாவட்ட ஆயர் வந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மேற்கண்டவாறு கூறினர்.

பிதா. அ. சேவியர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பிதா சேவியர் தமது உரையில், பின்தள்ளப்பட்ட கிராமங்களுக்கு நேரடியாகச்சென்று இச் சங்கத்தின் நிர்வாகிகள் உதவி புரிந்ததை விவரமாக எடுத்துக் கூறினர்.

சங்கத்தின் செயலாளர் சிங்கிலேயர் பீட்டர் அறிக்கையை வாசித்தார். (இ-6)

# திருமலை பஸ் நிலையம் இடம் மாறுமா?

திருகோணமலை ஜூலை 24

திருகோணமலையில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட மரக்கறிச்சந்தைப் பகுதியில் இது வரை இயங்கி வந்த பஸ் நிலையத்தை அருகிலுள்ள முற்றவெளிப் பகுதிக்கு இடம் மாற்ற அமைதிப் படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஏற்கனவே இங்கு அமைக்கப்பட்ட புதிய பஸ் நிலையத்தில் அமைதிப் படையினரின் [illegible] ள்ளது. அதனால் அந்த பஸ் நிலையம் இயங்குவதற்கு சாத்தியமில்லை.

தொடர்ந்தும் அதனை முகாமாக வைத்துக் கொண்டு அதனை அடுத்துள்ள முற்றவெளிப் பகுதியில் புதிய பஸ் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்தியப் படையினரின் புல்டோஸர் மூலம் நிலம் சமன் படுத்தப்பட்டு வருகின்றது.

கட்டட வேலைகள் [illegible] படும் என்று தெரிகிறது. (இ-150)


THE EXPRESS INSTITUTE KOPPAY

# A/L 90

## கணித வகுப்புகள்

BY திரு. வெக்டர்

சனி, ஞாயிறு வகுப்புகள்

| | |
|---|---|
| PURE | 1-00 - 2-00 p. m. |
| APPLIED | 2-00 - 3-00 p. m. |
| BASIC MATHS | 3-00 - 4-00 p. m. |

(கணித/விஞ்ஞான பிரிவினர் இருவர்க்கும்)

20-07-88 புதன் பி. ப. 4.30 க்கு ஆரம்பமாகிவிட்டது.

BASIC MATHS

BY திரு. தயாளன்

சனி, ஞாயிறு — 12-00 மணி

(C-5900)



# CEYGMA PUMPS சிக்மா பம்ப்ஸ்

எமது தொழிற்சாலை மீண்டும் நாவற்குழியில் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளருக்கும், விற்பனையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

உங்கள் தேவைகளுக்கேற்ற

- ✶ மின்மோட்டார்கள் (Electric Motor Pumps)
- ✶ நீர் இறைக்கும் இயந்திரங்கள் (Engine Pumps)

இப்பொழுது தாராளமாக கையிருப்பில் உள்ளன.

பழுதடைந்த பம்ப்கள் அதிவிரைவில் திருத்தி (Repairs) புனரமைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகளுக்கு நாடுங்கள்

**யுனைட்டெட் அக்ரோ என்ஜினியரிங்**

**United Agro Engineering**

274/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(பெரியாஸ்பத்திரி முன்பாக)

தொழிற்சாலை:

நாவற்குழி, கைதடி.

(C5817)



# வெஜிமைட்

## முழுமையான குடும்பத்துக்கேற்ற ஊட்டபானம்

விட்டமின் 'பி' உடனுன ஈஸ்ட் சாறு பாணுடன் கலந்து சாப்பிட அருமையானதாகவும் சூடான பானமாக புகழ்பெற்றும் விழங்குகிறது.




விலை 29/75 தொடக்கம்

விநியோகஸ்தர்கள்,

**மில்லர்ஸ் லிமிடெட்**

த. பெ. இல: 100.

கொழும்பு - 1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**A/L 90**

**பிரிவு 2**

சனி, ஞாயிறு
ஆரம்பம்:- 30- 07- 88
(8 - 00 a.m.)

**89 பிரிவு 3**

**ஆரம்பமாகிவிட்டது**

முக்கிய குறிப்பு:-

I. கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் ஒருங்கிணைந்து நடாத்தப்படுகின்றது.

II. மாணவர்கள் பிரிவு 2 க்கான அனுமதி களை முன் கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும்.

(C/5837)


## 5ஆம் வருட நினைவஞ்சலி



மலர்வு:
26 - 03 - 1964

உதிர்வு:
24 - 07 - 1983

1983 இருண்ட ஆடிக் கலவரத்தின்போது மானிப்பாயில் அகால மரணமடைந்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவனும் மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவனுமாகிய

**மகாதேவா இராஜகாந்தன் (பவுண்)**

குடும்பத்தின் முதல் மகனாய்
குலந்தன்னின் ஒளிவிளக்காய்
அடக்கத்தின் உறைவிடமாய்
எமை ஆனந்தத்தில் ஆழ்த்தி
ஓடிஆடித் திரிந்த உன்னுயிரை
அரக்கர் கூட்டம் இரக்கமின்றி
எடுத்த மாயம் என்ன?

எம் நெஞ்சத்தில் உறைந்தவனே, மகனே! அண்ணா நீளம்முடன் என்றைக்கும் வாழ்ந்து கொண்டே இருக்கிறாய்.
உனது ஆத்மசாந்திக்காக என்றும் பிரார்த்தித்துக்கொண்டிருக்கும்,

அம்மா, தங்கை, கண்ணா.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(5235)

## 181 ஆவது நாளில் . . . இவனுக்கு எங்கள் இதய அஞ்சலி!



செல்வன் கு. தில்லைராஜன்

ஜனனம் 2 - 12 - 1964
மரணம் 27 - 2 - 1988

திதி 24 - 7 - 1988

'மரணத்திலும் இவன் ஜனனித்தவன்'

ஆமாம். மரணத்தின்பின்புதான் சில மனிதர்களின் உயர்ந்த நோக்குகள் உயிர் பெறுகின்றன. அவர்களது நினைவுகள், சிந்தனைகள், செயற்பாடுகள் துலக்கமடைகின்றன.

இவனது ஆத்ம சாந்திக்காக தினமும் இறைவனை வேண்டி நிற்கும்

தாயார் ந. அகிலேஸ்வரி,
மற்றும் உறவினர்கள்.

அல்வாய் வடக்கு,
அல்வாய்

(5277)

வடமராட்சி கிழக்கில்

# கரையோர வீதிகள் மிகவும் மோசமான நிலையில்

தாளையடி, ஜூலை 24

வடமராட்சி கிழக்கில் உள்ள கரையோர வீதிகள் பல வருடங்களாகத் திருத்தப்படாமலிருக்கின்றன.

இதனால் அவ்வீதிகளினால் வாகனப் போக்குவரத்துக்கள் செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

மீன்பிடி இலாகாவினால் அமைக்கப்பட்ட இந்த வீதிகள் பின்பு உள்ளூராட்சித் திணைக்கள நிதி ஒதுக்கீட்டில் பராமரிக்கப்பட்டுவந்தன.

தற்போது இவ்வீதிகள் மாமுனை தொடக்கம் கட்டைகாடு வரை மிகவும் மோசமான முறையில் பழுதடைந்துள்ளன.

அண்மைக் காலங்களில் வீதிகள் திருத்தப்படாத நிலையிலேயே இந்நிலை ஏற்பட்டது. (இ-144)

# நாய்களுக்குத் தடுப்பூசி:

## ஒத்துழைக்கக் கோருகிறார் சுகாதார வைத்திய அதிகாரி

கோப்பாய், ஜூலை 24

யாழ் மாவட்டத்தில் தற்பொழுது விசர் நாய்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இதனால் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது. விசர் நாய் கடித்தால் அதற்கு வைத்தியமோ, பரிகாரமோ கிடையாது. நோயாளி இறந்துபோவார். எனவே இத்திட்டம் வெற்றிபெறப் பொது மக்கள் தங்களினால் இயன்ற ஒத்துழைப்பைத் தரவேண்டும்.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி திரு. ஏ. விஜயரத்தினம் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்வரும் 1ஆம், 2ஆம் திகதிகளில் புத்தூரிலும், 3ஆம், 4ஆம் திகதிகளில் கோப்பாயிலும், 5ஆம் 6ஆம் திகதிகளில் கொக்குவிலிலும், 8ஆம், 9 ஆம் திகதிகளில் கோண்டாவிலிலும், 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் அச்சுவேலியிலும், 13ஆம், 14ஆம் திகதிகளில் நல்லூரிலும், 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் நீர்வேலியிலும் விசர்நாய்த் தடுப்பு ஊசி போடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்கொண்டு இது சம்பந்தமான விவரங்களைச் சம்பந்தப்பட்ட பகுதி பிரதேசசபை அலுவலகங்களிலும், பொது சுகாதாரப் பரிசோதகர்களிடமும் குடும்பநல சேவையாளர்களிடமும் அறிந்துகொள்ளலாம் எனவும் அவர் கூறினார் (இ-72

# பழிவாங்கலை நிறுத்தி; நிவாரணம் வழங்குக

## வட பிரதேச கூட்டுக் கமிட்டி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை24

பழிவாங்கல் நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்படுவதுடன், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

1980 ஜூலையில் இடம்பெற்ற பொது வேலை நிறுத்தத்தின் போது வேலை இழந்து எட்டு ஆண்டுகள் கழிந்த நிலையில் ஊழியர்கள் சார்பாக எமது கோரிக்கைகளை மீண்டும் முன் வைக்கிறோம்.

இவ்வாறு வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்கமிட்டி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இதுவரை வேலைக்கு அழைக்கப்படாத அனைவரும் உடன் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும்.

பாரபட்சமின்றி அனைவருக்கும் வேலைநீக்கப்பட்ட காலத்திற்குரிய பாக்கிச் சம்பளம் வழங்கப்பட வேண்டும்

சேவைக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு அனைவருக்கும் உரிய தரமும் பதவி உயர்வும் வழங்கப்பட வேண்டும். (இ-5)

## ஊரடங்கும் தேடுதலும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் கடந்த வியாழனன்று உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

வியாழன்காலை அமுல்படுத்தப்பட்ட இந்த ஊரடங்கு உத்தரவு காரணமாக இப்பகுதிகள் ஊடான போக்குவரத்துகள் அனைத்தும் வேறுபாதைகள் ஊடாக நடைபெற்றன.

எனினும் பின்னர் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதை அடுத்து வழமையான போக்குவரத்துகள் நடைபெற்றன.

(ஒ-72)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
4-4-1964

உதிர்வு:
24-7-1987

கனகசுந்தரம் விக்னராஜ்

திதி: 11—8—1988

எங்கள் அன்புச் செல்வமே நீர் மறைந்து ஓராண்டு கழிந்தாலும் உமது சிரித்த முகம் எம் மனதைவிட்டு அகலாது இருக்கின்றது.

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், சகோதரன்,
உற்றார், உறவினர்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

(5273)

### மக்கள் முகம்

## பழைய மாணவர் சங்க நிர்வாகிகள்

கொடிகாமம் ஜூலை 24

நாவற்காடு கணபதிப் பிள்ளை வித்தியாலத்தில் பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அதிபர் திரு. மா. சிதம்பரநாதன் இதனை அங்குரார்ப்பணம் செய்தார்.

தலைவர் திரு. து. கங்காதரன் உபதலைவன் சி. இராசேஸ்வரன் செயலாளர் திரு. சி. ஏகாம்பரநாதன் உபசெயலாளர் செல்வி து. சுலோசனா பொருளாளர் செல்வி க. சரசுவதிப்பிள்ளை நிர்வாக உறுப்பினர்கள்:-

செல்வி செ. கனகம்மா
செல்வி செ. விஜயவனிதா
செல்வி இ. தனலட்சுமி.
செல்வி இ. சாந்தநாயகி
திரு. க. உதயகுமார்
திரு. வ. சிறீஸ்கந்தராசா
திரு. க. இராசதுசா
திரு. செ. தருமசிவநசன்.

## ஜனாதிபதி சாரணர்சின்னம்

பளை கொத்தணிக்கா வித்தியாலய சாரணர் குழு அணித் தலைவர் இ. விக்கினேஸ்வரன் ஜனாதிபதி சாரணர் சின்னத்தைக் பெற்றுக் கொண்டார். (இ-75)

## தபால் நிலையத்தில் கொள்ளை

மட்டக்களப்பு ஜூலை 24

மட்டக்களப்பு கோட்டைமுனை தபால் நிலையத்தில் ஆயுதமுனையில் சுமார் 8 ஆயிரம் ரூபா பணம் கொள்ளை அடிக்கப்பட்டது.

கடந்த வார இறுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

ஆயுத பாணியாக பிரவேசித்த இரு இளைஞர்கள் தபால் அதிபர் உட்பட ஊழியர்களை மிரட்டி கொள்ளை அடித்துச் சென்றனர்.

(இ-21)

## மீண்டும் பேரணி!

மாஸ்கோ, ஜூலை 24

ஆர்மெனியாவில் மேலும் பேரணி ஒன்று கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ)

## செஞ்சிலுவைச் சங்க உதவி அதிகரிப்பு

தாளையடி, ஜூலை 24

வடமராட்சி கிழக்கில் மேலும் பல கிராமங்களுக்குசெஞ்சிலுவைச் சங்கத்தின் வைத்திய சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய இடங்களுக்கேஇச்சேவை அதிகரிக்கப் பட்டுள்ளது.

கிராமங்களுக்குச் சென்று வைத்தியசேவைகளை வழங்குவதற்கு வாகனம் ஒன்றும் வழங்கப்பட்டிருக்கின்றது.

(இ-144)


## அன்புடன் அழைக்கிறார்கள்! வரவேற்கிறார்கள்! ''விருந்து அளிக்கிறார்கள்''

**"OLD PARK CHINESE RESTAURANT"**

ஸ்தாபனத்தார்

✶ கலியாண வரவேற்புகளுக்கும்
✶ கொண்டாட்ட வைபவங்களுக்கும்

யாழ்நகரில் தனிப்பெயர் பெற்றுவிட்ட எமது ஸ்தாபனத்தில் வரவேற்பு அறை உட்பட சகல வசதிகளும் உண்டு. அமைதியான சூழ்நிலை, அனுபவம்மிக்க சேவை, குறைந்த விலையில் சுவைமிக்க, நிறைந்த சிற்றுண்டி, மற்றும் உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு வகைகள். ஒரு முறை சுவைத்தவர்கள் மறுமுறையும் வருவார்கள் உங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுவைத்து மகிழ்வீர்.

Old Park Chinese Restaurant
207, Old park Road, JAFFNA.

(C 5823)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்!

காங்கேசன்துறை இடந்தரை ஒழுங்கையைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் திருமதி. மனோரஞ்சிதம் (U. K), ஜெயரஞ்சிதம் (U. K), ஞானரஞ்சிதம், கலாரஞ்சிதம் ஆகியோரின் பாசமுள்ள தாயாரும் திரு. க. செல்வராஜா (U. K) அவர்களின் அன்பு மாமியாருமாகிய

**திருமதி மனோன்மணி கணபதிப்பிள்ளை**

அவர்கள்

நிகழும் விபவ வருடம் ஆனிமாதம் 12ம் நாளில் (26-6-88) இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 25-7-88 திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலையிலும் உத்தரக்கிரியை சபிண்டீகரணம் ஆடிமாதம் 11ஆம் நாள் (26-7-88) செவ்வாய்க்கிழமை பகல் அன்னாரின் அளவெட்டி இல்லத்திலும் நடைபெறும். அவ்வமயம் அன்றைய கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நேரில் அழைப்பு விடமுடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

இங்ஙனம்
கணவன் கணபதிப்பிள்ளையும்,
பிள்ளைகளும், மருமகனும்.

கேணிக்கரை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(C 5306)


யாழ். மாவட்டத்தின் இன்றைய முன்னணி ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து நடாத்தும்

**A/L 89-90**

**கலை, வர்த்தக WEEKEND CLASSES**

ஆரம்பம் 28- 7- 88

பொருளியல் - திரு. லோகசிங்கம் (வடமராட்சி புகழ்)
கணக்கியல் - திரு. ஸ்ரீ
வர்த்தகம் - திரு ஜெயராமன்
அளவையியல் - திரு. விக்கி
இந்துநாகரீகம்- திரு. ஜோதீஸ்வரன்
தமிழ் - பிரபல ஆசிரியர்

விபரங்களுக்கு:
பொறுப்பாளர் K. S. முத்துலிங்கம்

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**

101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கருகாமையில்)

(C. 5903)


யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம் (வரையுள்ளது)

## இரும்புப் பொருட்கள் விற்பனைக் கேள்வி

இரும்புக் கடை ஒன்றை ஸ்தாபிக்கத் தேவையான சகல விதமான பொருட்களும் மொத்தமாக விற்பனை செய்வதற்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. மேற்படி பொருட்கள் ஸ்ரான்லி வீதியிலுள்ள (விக்னு ரியூட்டறிக்கு முன்பாக) எமது கிளையில வேலை நாட்களில் காலை 9-00 மணி தொடக்கம் பி.ப. 5-00 மணி வரை பார்வையிடலாம். கேள்விப் பத்திர விண்ணப்பப் படிவங்களை 259, மின்சார நிலைய வீதியில் உள்ள எமது தலைமைக் காரியாலயத்தில் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமாக 250/- ரூபாவும், மீளளிக்க முடியாத பத்திரப் பணமாக ரூபா 10/- உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் சீல் செய்யப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

கேள்விப் பத்திர விண்ணப்பம் பெறும் இறுதித் திகதி:
04-08-88 பிற்பகல் 3. 00 மணி வரை
கேள்வி அனுப்பும் இறுதித் திகதி:
05-08-88 பிற்பகல் 3.00 மணிவரை

பொது முகாமையாளர்.

259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
21-07-1988

(C-5849)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
1933-09-0)

மறைவு:
1986-07-17

திதி:
1988-07-24

**திருமதி யோகம்மா சுப்பிரமணியம்**

(முன்னாள் ஆசிரியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

எங்கள் அன்புத்தாயே! எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! எங்களையெல்லாம் அன்புடனும், பண்புடனும் வளர்த்து நல்வழிகாட்டி, கல்வியூட்டி இந்த உயர்வான நிலைக்கு உயர்த்திவைத்து ஈன்றபொழுதிலும் பெரிதுவந்த அருமைத்தாயே நீங்கள் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகெய்தி இரண்டாண்டுகள் சென்றுவிட்டன. ஈராண்டல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டகலாது.

உங்கள் நினைவுடன்
கணவன், பிள்ளைகள்,
தாய், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

'யோகபவனம்'
மருதடி, சாவகச்சேரி.

(5251)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு

**பொருள்:**
அறிவு மிகுந்தவரிடையே முந்திச்சென்று பேசாத அடக்கம் ஒருவனுக்கு நன்மை என்று சொல்லப்பட்டவை எல்லாவற்றிலும் நல்லது.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22703
24-07-1988 த. பெ. இல. 23


## தொடரட்டும் பரீட்சை

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண நகரமும் அதன் சுற்றுப்புறங்களும் இருந்த பதற்ற நிலையில், நேற்று ஆரம்பமாகிய ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை திட்டமிட்டபடி நடக்குமா என்ற சந்தேகம் அன்று எல்லோருக்கும் ஏற்பட்டிருந்தது.

திடீரென வந்த ஊரடங்கு தொடர்ந்தால், 1987 டிசம்பர் ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு நடந்த கதி, உயர்தர பரீட்சைக்கும் ஏற்பட்டு விடுமோ என மாணவர்களும், பெற்றோரும், மற்றோரும் கலங்கினார்கள்.

ஆனால் பரீட்சையைக் கருதி அமைதிப் படையினர் நேற்று ஊரடங்கைத் தளர்த்தியதால் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் திட்டமிட்டபடி பரீட்சை ஆரம்பமாகியது மாணவர்களுக்கு மட்டுமன்றி பெற்றோருக்கும், எதிர்காலப்பிரசைகளின் நலனில் அக்கறைகொண்ட சகலருக்கும் அது பெரும் ஆறுதலைத் தந்தது.

பரீட்சை சுமுகமாக ஆரம்பித்தது போலவே தொடர்ந்து எவ்வித இடையூறும் இல்லாமல் நடந்து முடிய வேண்டும் என்பது பலரது வேண்டுதலும், விருப்பமாகவும் உள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஸ்ரீலங்காவில் தமிழர்கள் சிறுபான்மையினர் என்பது உண்மை. அவர்கள் அரசியல் ரீதியில் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள் என்பது வெளிப்படை. எனினும் அவர்களது சுதந்திர உணர்வையும், தமக்கெனக் கலாசாரமும் பண்பாடும் கொண்ட ஒரு தனித்துவமான அறிவார்ந்த சமூகம் என்பதையும் எவரும் மறந்து விடலாகாது; மறந்து விடவும் கூடாது.

எல்லா வகைகளாலும் ஈழத்தமிழர்களை அடக்கவும் முடக்கவும் பல தரப்பாரும் முயன்ற போதிலும் அவர்கள் நிமிர்ந்தும், மிடுக்காகவும், துணிவுடனும், வீரத்துடனும் நிற்பதற்கு அடித்தளம் கல்விதான்.

ஆகையால் என்ன இடர் உற்ற போதிலும், எவ்வித இன்னலை அனுபவித்த போதிலும், ஏழையாயினும் கல்வியைத் தனது செல்வமாக்கிக் கொள்ளும் எமது மரபை, பாரம்பரியத்தை நாம் மறந்துவிடக்கூடாது; கைவிட்டு விடலாகாது.

எங்கள் தந்தையரைப்போல, எங்களைப் போல, எங்கள் பிள்ளைகளும் கல்வி அறிவுள்ள ஒரு சமூகமாக மிளிர வேண்டும் என்பதில் எந்தக் கட்டத்திலும் ஆர்வத்தையோ, அக்கறையையோ இழந்து விடக்கூடாது.

எங்கள் கல்வி நிலையை மழுங்கடித்து, எமது எதிர்காலச் சந்ததியினரை அறிவில்லாத சமூகமாக மாற்றுவதற்கு எந்தப் பக்கத்தில் இருந்து எடுக்கப்படும் முயற்சிக்கும் இடம் கொடுக்கலாகாது.

ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சை எவ்வித இடையூறும் இல்லாமல் நடப்பதற்குச் சகல தரப்பாரின் ஒத்துழைப்பும் அவசியம்.

பரீட்சை ஒழுங்காக நடப்பது எந்தளவு முக்கியமோ, மாணவர்கள் மனம் செலுத்திப் பரீட்சைக்குத் தயார் செய்யக்கூடிய புறச் சூழ்நிலையும் அந்தளவுக்கு அவசியம் ஆகும். பயப்பிராந்தியுடனும், பதற்றத்துடனும் பரீட்சைக்கு உரிய முறையில் தயார்செய்ய முடியாது. திடீர் என என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்வுடன் பரீட்சை எழுத முடியாது.

அவ்வாறு பய உணர்வுடன், மாணவர்கள் பரீட்சை எழுதும் நிலை, எல்லா வகைகளாலும் தவிர்க்கப்பட வேண்டும்.

# வளைகுடாவில் ஈராக்கின் தாக்குதல் தீவிரம்

# யுத்த நிறுத்தத்துக்கான வாய்ப்பும் அதிகரிப்பு

வாஷிங்டன், ஜூலை 24

வளைகுடாவில் யுத்த நிறுத்தம் விரைவில் வரும் வாய்ப்புக்கள் அதிகரித்து வரும்வேளை, ஈராக்கிய படைகளும் தீவிரமடைந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

யுத்தநிறுத்தம் ஒன்று வருவதற்கு முன்னர் தனது இராணுவ லட்சியங்களை அடைந்து விடுவது என்ற வேகத்தில் ஈராக்கிய படைகள் தாக்குதலை நடத்தி வருவதாக பக்தாத் வட்டாரங்கள் தெரிவித்தன.

★ ஈரானினால் கைப்பற்றப்பட்ட ஈராக்கிய பிரதேசங்களை மீட்டெடுப்பது.

★ பெரும் எண்ணிக்கையில் ஈரானிய படையினரை யுத்தக் கைதிகளைப் பிடிப்பது.

தற்போது ஈரானியரிடம் உள்ள ஈராக்கிய யுத்தக் கைதிகளின் எண்ணிக்கையிலும் பார்க்க குறைவான ஈரானிய யுத்தக் கைதிகளே ஈராக்கிடம் உள்ளனர்.

இந்த லட்சியங்களை யுத்த நிறுத்தம் வருவதற்கு முன் அடைந்துவிட வேண்டும் என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் திட சங்கற்பம் பூண்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் யுத்த நிறுத்தம் பற்றி ஐ.நா. பொதுச்செயலாளருடன் பேச்சுக்கள் நடத்துவதற்காக ஈரான், ஈராக் வெளியுறவு அமைச்சர்கள் அடுத்த வாரம் வாஷிங்டன் செல்வர் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

### லெபனானில் கார்க் குண்டு! 10 பேர் பலி!!

பேரூட், ஜூலை 23

லெபனான் மேற்குப் பகுதியில் நேற்று கார்க் குண்டு ஒன்று வெடித்ததில் 10 பேர் கொல்லப்பட்டனர்; 17 பேர் காயமடைந்தனர்.

லெபனானில் நிலைகொண்டுள்ள 25 ஆயிரம் சிரியத் துருப்புக்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-எ)

### மூன்று கட்சிகள் இணைப்பு!

புதுடில்லி, ஜூலை 23

இந்திய நாடாளுமன்றத்தில் மழைக்காலக் கூட்டத்தொடர் இம் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

அதற்கு முன்னர் ஜனதா, லோக்தள், ஜன் மோர்ச்சா அரசியல் கட்சிகளை இணைத்து ஒரு எதிர்க்கட்சியை உருவாக்கும் முயற்சியில் ஹரியானா முதலமைச்சர் தேவிலால் ஈடுபட்டுள்ளார். (எ)

வெளி உலகில்

## ஈராக்குடன் நேரடிப்பேச்சா? ஈரான் அரசு நிராகரிப்பு

வளைகுடா யுத்த நிறுத்தம் பற்றி நேரடிப் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று ஈராக் தெரிவித்த யோசனையை ஈரான் நிராகரித்து விட்டது.

இதன் மத்தியில் யுத்த நிறுத்தத்தை அமுலுக்குக் கொண்டு வருவதில் உள்ள தொழில் நுட்ப நுணுக்கங்களை இரண்டு அரசுகளுடன் நேரில் பேசி வகுப்பதற்காக ஐ. நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் ஐ.நா. ராணுவ அதிகாரிகள் குழு ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

ஒரு வாரத்தில் யுத்த நிறுத்தத்துக்கான பூர்வாங்கங்களை இக்குழு தயாரித்துவிடும் என்று அறிவிக்கப்படுகிறது.

## ஜாக்ஸன் பேச்சுக்கேட்டு மக்கள் கண்ணீர் விட்டனர்!

அட்லாண்டா, ஜூலை 23

ஜனநாயகக் கட்சி மாநாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் கோரிப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்த கறுப்பு இனத் தலைவரான வண ஜெஸி ஜாக்ஸன் பேசியபோது, பிரதிநிதிகள் கண்ணீர்விட்டு அழுதனர் என்று அறிவிக்கப்பட்டது.

ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தைப் பெற்றுள்ள திரு. மைக்கல் டுகாகிஸ்ஸை, வண ஜாக்ஸன் பாராட்டினார்.

''நான் திரு. டுகாகிஸுக்கு தலைவணங்குகின்றேன்.

''அவரின் முன்னோர்கள் அமெரிக்காவுக்குக் குடியேற்றக்காரர்களை ஏற்றிவந்த கப்பலில் வந்தவர்கள்.

''எனது முன்னோர்களோ அமெரிக்காவுக்கு அடிமைகளை ஏற்றிவந்த கப்பலில் வந்தவர்கள்.

''இன்று இங்கு நாம் இருவரும் ஒரே கப்பலில் (Same Boat) பயணம் செய்கிறோம்''—

இப்படி வண ஜெஸி ஜாக்ஸன் பேசியபோது மாநாட்டு மண்டபமே அதிர கரவொலிஎழும்பியதாகவும் பிரதிநிதிகள் பலர் வாய்விட்டே அழுதனர் என்றும் பி. பி. சி. அறிவித்தது. (எ)

## எம்.ஜி.ஆர். கழுத்திலிருந்த 'கண்ணாடி விரியன் பாம்பு'

சென்னை, ஜூலை 24

ஜெயலலிதா கண்ணாடி விரியன் பாம்பு. அதனால் அது யாரையும் கொத்திவிடக் கூடாது என்பதற்காக எம். ஜி. ஆர். தனது தலையில் வைத்திருந்தார். இப்போது அது கட்டுப்பாடின்றி அலைகிறது.

மதுரையில் நடந்த கூட்டத்தில் பேசியபோது முன்னாள் அமைச்சர் வீரப்பன் இப்படிச் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது:

பாம்பிற்கும் பால் வார்க்கும் பண்பாளர் எம். ஜி. ஆர். பாதகர்களுக்கு அருளும் நெஞ்சம் படைத்தவர். அதனால் தான் அவர் நல்ல பாம்புகளையும் வளர்த்தார். கண்ணாடி விரியன்களையும் வளர்த்தார்.

அதைக் கீழ விட்டால் யாரையாவது கடித்துக் கொன்றுவிடும் என்று பயந்து தனது கழுத்திலே போட்டுக் கொண்டார்.

பரமசிவன் கழுத்தில் கிடந்த பாம்பு கடித்தாலும் அந்த விஷம் பரமசிவனை ஒன்றும் செய்யாது. விஷத்தை எப்படிப் பரமசிவன் தொண்டையில் நிறுத்தி வைத்தாரோ, அதே போல எம்.ஜி.ஆர். துப்பாக்கிக் குண்டைத் தனதுதொண்டையில் 6 மாதம்வைத்து இருந்தார்.

அப்படிக் கழுத்திலே வைத்திருந்த கண்ணாடி விரியன் பாம்பு மற்றவர்களைப் பார்த்து கருடா சவுக்கியமா என்று கேட்கிறது.

இப்போது அந்தப் பாம்புக்கு பாதுகாப்பு இல்லை. ஏனென்றால் பரமசிவன் இல்லை.

இப்போது அப்பாம்பு படம் எடுத்துத் திரிகிறது. அதை அடிக்க ஆளுக்கொரு தடியோடு இருக்கிறார்கள். அதை யார் வேண்டுமானாலும் அடிக்கட்டும். யார் வேண்டுமானாலும் அழிக்கட்டும்.

இப்படி வீரப்பன் சொன்னார். (எ)

### அமைச்சர் ராஜினாமா!

ரங்கூன், ஜூலை 23

பர்மாவின் உள்துறை அமைச்சர் ராஜினாமாச் செய்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

பொலீஸ் வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்ற சந்தேக நபர்களில் 31 பேர் மூச்சுத்திணறி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக அவர் ராஜினாமாச் செய்தார். (எ)

### புதுடில்லியில் வாந்திபேதி!

புதுடில்லி, ஜூலை 23

புதுடில்லியில் வாந்திபேதி நோயினால் நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

சுமார் 6 ஆயிரம் பேர் அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

### பஞ்சாப்பில் 16 பேர் சுட்டுக்கொலை!

சண்டிகார், ஜூலை 23

பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரஸ் மாவட்டத்தில் நடந்த 24 மணித்தியாலங்களில் மட்டும் 16 பேர் சீக்கியத் தீவிரவாதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### வேலை நிறுத்தம் முடிந்தது

சென்னை, ஜூலை 23

தமிழ் நாட்டில் அரசு ஊழியர், ஆசிரியர் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தம் முடிவடைந்து விட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு மாதமாக இந்த வேலை நிறுத்தம் நடந்து வந்தது. (ஒ-எ)

இலங்கைப்பிரச்சினை

### ராஜீவ் - ராவ் பேசுவர்

இலங்கைப்பிரச்சினை பற்றி பிரதமர் ராஜீவ் காந்தி, வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவுடன் இவ்வாரம் பேசவிருக்கின்றார். புதுடில்லிச் செய்தி ஒன்று இப்படித் தெரிவித்தது.

திரு. நரசிம்மராவ் வெளியுறவு அமைச்சராக மூன்று வாரங்களுக்கு முன்னர் பதவி ஏற்றார்.

அதன்பின்னர் பிரதமர் ராஜீவுடன் இலங்கைப் பிரச்சினை பற்றி பேசப்போவது இதுவே முதல் தடவை.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## வழமை போல் வருடாந்த உற்சவங்கள் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட கால இடைவெளியின் பின்பு இந்து, கிறிஸ்தவ ஆலயங்களின் வருடாந்த உற்சவங்கள் வழமைபோல் நடைபெறத் தொடங்கியுள்ளன.

மாவட்டத்தில் இரவு நேர ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுகின்ற போதிலும் ஆலய உற்சவங்கள் நடைபெறும் சுற்றாடல் விதிவிலக்கு பெறுகின்றது. ஆலய நிர்வாக சபையினர் சுற்றாடலிலுள்ள இந்தியப்படை முகாம்களில் இதற்கான விண்ணப்பம் சமர்ப்பித்து அனுமதி பெறலாமென இந்தியப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதே நேரம் கடந்த பல வருடங்களாக செயலிழந்த நிலையில் காணப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் கலை, கலாசார அமைப்புக்கள் புனரமைக்கப்பட்டு செயற்படத் தொடங்கியுள்ளன.

வார இறுதி நாட்களில் மாவட்டத்தின்பலபாகங்களிலும் கரபந்தாட்டம் உதைபந்தாட்டம், கிரிக்கெட் உட்பட விளையாட்டுப் போட்டிகள், நாடக விழாக்கள் இந்த அமைப்புகளால் நடத்தப்பட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க நாட்டுக் கூத்து அரங்கேற்றமும் நடைபெற்று வருகின்றது. (இ 21)

## சமய சந்நிதிகளில்

### மண்டைதீவில் பேதுருவானவர் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 24

மண்டைதீவு புனித பேதுருவானவர் திருவிழா நேற்று 23 ஆம் திகதி கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் மாலை 6மணிக்கு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

31 ஆம் திகதி காலை சிறுவர்களுக்கு முதல் நன்மை வழங்கப்படும். மாலை 6 மணிக்கு நற்கருணை ஆராதனை நடைபெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி காலை 6-45 மணிக்கு திருவிழாத் திருப்பலி நடைபெறும். மாலை 5 மணிக்கு புனித பேதுருவானவரின் திருச் சுரூபப் பவனியுடன் திருவிழா முற்றுப்பெறும். (ஒ)

### உடப்பு திரௌபதி அம்மன் திருவிழா

புத்தளம் மாவட்டம் உடப்புத் திரௌபதி அம்மன் ஆலயத்தில் சென்ற 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமானது.

தொடர்ந்து 18 நாட்களாக திருவிழா நடைபெற்று 27 ஆம் திகதி புதன்கிழமை தீமிதிப்பாகிய பூமி திப்பு விழா நடைபெறும். (இ)

### இன்றைய விழா

யாழ்ப்பாணம் ஜூலை 24

இன்று நல்லை ஆதீனத்தில் நடைபெறும் ''பவன முக்தாசனம்'' நூல் வெளியீட்டு விழாவின் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த விழா இன்று 4 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

### விஞ்ஞான ஆசிரியை

புங்குடுதீவு, ஜூலை 24

புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயத்துக்கு விஞ்ஞான ஆசிரியை ஒருவர் சென்ற மாதம் நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஆலோசனைக் கூட்டம்

இலங்கை — இந்தியஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒருவருடம்பூர்த்தியாவதை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று ஞாயிறு காலை பத்து மணிக்கு யாழ் பிரதான வீதியில் இலக்கம் 250 ஆம் இல்லத்தில் நடைபெறும்.

இதற்கான ஒழுங்குகளை பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஒழுங்கு செய்துள்ளனர். (இ-10)

### உப்பு விலை உயர்வு

கொழும்பு ஜூலை 24

உப்பின் விலையை இலங்கை உப்புக் கூட்டுத்தாபனம் உயர்த்தி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஒரு மெட்ரிக் தொன் உப்பின் விலை இனி 200 ரூபாவாக இருக்கும்.

பழைய விலை 190 ரூபாவாகும்.

புத்தளம் உப்பள உற்பத்தியாளர்களின் [illegible] அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

# 60 மைல் தூரத்தைக் கடக்க 24 மணி நேரம்

## முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஒருவருக்கு ஏற்பட்ட அனுபவம்

புதுக்குடியிருப்பு ஜூலை 24

முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேர ஒருபயணிக்கு 24 மணி நேரம் சென்றது.

அவர் தமது பயண அனுபவத்தை இங்கு விபரிக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள எனது உறவினர் ஒருவரைச் சந்திப்பதற்காக 22 ஆம் திகதி வெள்ளி காலை 10 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டேன்.

முல்லைத்தீவு பஸ்நிலையத்தில் யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில் ஏறினேன்.

பரந்தன் வீதிவழியாக பஸ் சென்று கொண்டிருந்தது.

நண்பகல் 12 மணியளவில் முல்லைத்தீவு, இரட்டைவாய்க்கால், புதுக்குடியிருப்பு சோதனைச் சாவடிகளை ஒருவாறு கடந்து வந்தோம்.

அடுத்து 1 மைல் தூரத்தில் உள்ள தேவிபுரம் கிராமத்தில் மீண்டும் ஒரு சோதனைச் சாவடியில் எம்மையும் எமது பொதிகளையும் இராணுவத்தினரின் சோதனைக்கு உட்படுத்திக் கொண்டோம்.

### நீண்டநடை

அடுத்து வந்து சோதனைச் சாவடி சுதந்திரபுரம். இச் சோதனைச் சாவடியில் நாம் இறங்கி [illegible] தூரம் நடந்து செல்வதற்குப் [illegible]டோம்.

இச்சோதனை சாவடியில் மட்டும் ஆங்காங்கே இருந்த மூன்று பேரிடம் தனித்தனி அடையாளக் கார்டுகள் பொதிகள் என்பவற்றை சோதனைக்காகச் சமர்ப்பித்தோம்.

சோதனைச் சாவடியில் இருந்தவர்களிடம் பளபளக்கும் கைக்கோடரி, கத்தி, நன்கு சீவிப் பிடி போடப்பட்ட கம்புகள் என்பனவும் காணப்பட்டன.

இந்நிலையில் எம்மை அறியாமலே ஒரு வித பயம் எங்களுக்குள் ஆளை ஆள்மாறிப்பார்த்தவண்ணம் ஒவ்வொருவராக நின்று கொண்டிருந்தோம்.

எனக்கு முன்னே இருந்த ஒருவர் அடிக்கப்பட்டார். வேறொருவரின் தாடியைப் பிடித்து இழுத்தனர். அடுத்தவரின் தலையைப்பிடித்து இழுத்து இது போலி முடியா என்று கேட்டனர்.

அடுத்து வந்தவர் 60 வயதில் அடுத்த மாதம் இளைப்பாற உள்ள ஓர் உதவி அரசாங்க அதிபர்.

அவரின் சுற்றுலாப்பையும் மிக நுணுக்கமாகப் பரிசோதிக்கப்பட்டது.

இவ்வாறே ஒவ்வொருவரும் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி அடுத்த சோதனைச் சாவடியான விஸ்வமடுச் சோதனைச் சாவடிக்குச் சென்றால் அங்கேயும் அதே நிலைதான.

இப்படியே ஆங்காங்கே இருந்த இராணுவ முகாம்களில் சோதனைகள் நடைபெற்று ஒருவாறு பரந்தனை வந்து அடைந்தோம். பரந்தன் சந்தி இப்போது ஓரளவு சுமுக நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

நேரம் ஆகிக்கொண்டிருந்ததால்பஸ் சாரதியும் மிகவேகமாக பஸ்ஸைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

உணவுக்காக விஸ்வமடுவிலோ, பளையிலோ பஸ் நிறுத்தப்படாததால்பிரயாணிகள் மிகக் களைப்படைந்திருந்தனர்.

இந்நிலையில் கொடிகாமம் பஸ்நிலையத்தை அடைந்தபோது அனைவருக்கும் ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் என்பதுதான் அந்தச் செய்தி. பிரயாணிகளில் ஒரு சிலர் கொடிகாமத்தில் இறங்கிக் கொண்டனர்.

அவர்களுடன் நானும் சேர்ந்து இறங்கி ஒருவரின் வீட்டில் இரவு நேரத்தைக் கழித்தேன்.

முன்னேற்பாடு இல்லாததாலும் கொடிகாமத்தில ஊரடங்குச் சட்டம் 6மணிக்கு என்பதனாலும் இரவிலும் தேநீர் மட்டும் பருகி பசியுடன் இரவைக் கழித்து ஒருவாறு அடுத்த நாள் சனிக்கிழமை காலை 10 மணி அளவில் வீடு போய்ச் சேர்ந்தேன்.

இப்படி அந்தப் பிரயாணி தமது அனுபவத்தைத் தெரிவித்தார். (இ-126)

### திறப்பு விழாவும் தமிழ்த் தின விழாவும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலய நூலகக் கட்டடத் திறப்பு விழாவும் தமிழ் தின விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றன.

அதிபர் க. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. சபாநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலகத்தைத் திறந்து வைப்பார்.

பேராசிரியர் கே. சண்முகநாதன் சண்டிலிப்பாய் உப அதிபர் செல்வி சாந்தினி சுப்பிரமணியம் மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவர். (இ-5)

### இங்கும் கோமாரி பரவுகிறது

தாளையடி ஜூலை 24

வடமராட்சி கிழக்கிலும் மாடுகளுக்கு கோமாரி நோய் காணப்படுகின்றது.

தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படா விட்டால் இப் பகுதியில் உள்ள மாடுகள் முற்றாக அழிந்து விடும் நிலை ஏற்பட்டு விடும் என பொது மக்கள் அஞ்சுகின்றனர்.

வடமராட்சி கிழக்கில் ஆழியவளை, முள்ளியான் உடுத்துறை, மாசார், ஆகிய இடங்களில் உள்ள மாடுகளே இந்நோயினால் பாதிப் படைந்துள்ளன. (இ-144)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ சேட்டிங் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

# உதயன்

24 - 07 - 1988 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுர ★ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

## IN MEMORIAM



ROHAN GAJANANDAN THAMBIAHPILLAI

**Born:** 8 - 10 - 1972 **Called to Rest:** 24 - 06 - 1988

Into your Arms, dear Jesus

**Months may pass, but memories stay**
**Loved in silence everyday.**

It is with deepest appreciation that we the members of the Family of the late ROHAN GAJANANDAN THAMBIAHPILLAI thank all friends, relatives and all others who attended the funeral, sent messages of condolence, floral tributes, helped us in numerous ways in our time of grief. We regret our inability to thank all individually.

All at 151, Hospital Road, Jaffna.

(C5910)

## திருமலை-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த தகவல்கள் தெரிவித்தன.

இதனை அடுத்து பந்தோபஸ்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற அசம்பாவிதங்களின்போது சிங்களவர்களும், தமிழர்களும் கொல்லப்பட்டதை அடுத்தே அங்கு பதற்றம் நிலவுகிறது.

இதன் காரணமாக வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம்–திருகோணமலை பஸ்சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

எனினும்நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கு பஸ் சேவை நடைபெற்றது

இதே வேளை திருகோணமலை நகரில் இந்திய அமைதிப்படையும், இலங்கைப் பொலீஸாரும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளதாக திருமலை மாவட்ட இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் டென்னில் கொப்பெகடுவ தெரிவித்தார்.

(ஒ-எ1ற-அ)

## முல்லையில் மோதல்

கொழும்பு, ஜூலை 24

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளுக்கும் அமைதிப் படையினருக்கும் இடையிலான மோதலில் 7 விடுதலைப் புலிகளும் 3 அமைதிப் படையினரும் மரணமடைந்ததாக இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் முகாமொன்றைச் சுற்றிவளைத்தபோதே இம்மோதல் ஏற்பட்டதாகவும் மேலும் 9 விடுதலைப் புலிகள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-5)

## ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

2200 வெற்றுச்சாக்குகளுக்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. குறிப்பிட்ட கேள்விப்பத்திரங்களை தலைமைக்காரியாலயத்தில் ரூ. 2/- செலுத்திப் பெற்று 28-7-88 ஆந் திகதி பகல் 12-00 மணிக்கு முன்னர் ''பொது முகாமையாளர், ஊர். ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை'' என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். கேள்விப் பத்திரங்களை 27-7-88 ஆந் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

23-7-88 பொது முகாமையாளர்

(C 5929)

## ஒய்வூதிய---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தது.)

எனினும் செயலகத்தின் வேறு பிரிவுகளில் இருந்த 15 ஊழியர்கள் தற்போது ஓய்வூதிய வேலைகளைக் கவனித்து வருகின்றனர்.

ஆகவே வேலைகளை துரிதமாக முடித்து ஓய்வூதியக்கொடுப்பனவுகளை அடுத்த வாரத்திலேயே செய்து முடிக்கலாம் என எதிர்பார்ப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன. (ஓ-க-9)

## O/L88

THE EXPRESS INSTITUTE KOPAY

**DAY CLASS**
காலை 8-00
பி-ப 1-00

**4 மாத தீவிர பயிற்சி வகுப்பு**

பிரிவு 1 ஆரம்பமாகியுள்ளது.

வருடம் தோறும் சிறந்த பெறுபேறுகளுக்கு தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவுடன் மேலும் சில விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.

(C 5896)

சைக்கிள் டயர்
உலகில் உயர் வட்டம்
DSI டயர்

★ பாதையில் முழுமையான பிடிப்பு
★ உன்னத தொழில் நுட்பம்
★ வாடிக்கையாளர் விருப்பு
★ நீடித்த உழைப்பு
★ நியாய விலை

இவையனைத்தும் ஒருங்கே உள்ளடக்கி SLS முத்திரையுடன் உங்களை அடைகின்றன
DSI டயர்களும் ரியூப்புகளும்

**சம்சன் றப்பர் இன்டஸ்ட்ரீஸ் (பி வி ரி) லிமிட்டெட்**
மஹார, கடவத்தை.

விநியோகஸ்தர்கள்:
தயாஸ்ரீ டிஸ்ரிபியூட்டேர்ஸ்
55/11 கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(5254)

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் சங்கரப்பிள்ளை
(காரைநகர்)

காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த சண்முகம் சங்கரப்பிள்ளை, (இளைப்பாறியமாவட்ட விவசாயவிரிவாக்க அதிகாரி) 23.07.88ல் காலமானார். இவர் சுந்தரமூர்த்தி (உதவிப் பணிப்பாளர், பிரசுரப் பிரிவு கண்ணொறுவ பேராதனை) சிவப்பிரகாசம், (பாடவிதான நெல், உதவிப்பணிப்பாளர், காரியாலயம், திருநெல்வேலி), சிவகலை, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புத் தந்தையும், செ. ஆறுமுகம் (ஆய்வுகூட நுண்கலைஞர், தனியார் வைத்திய கல்லூரி மூளாய்), பொ.பாலசிங்கம் (நிர்வாக உத்தியோகத்தர், உதவிஅரசாங்க அதிபர் பணிமனை, வேலணை) ஆகியோரின் மாமனுவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் ஞாயிற்றுக் கிழமை, 24.07.88 மு.ப. 8. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலைத் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ச. சுந்தரமூர்த்தி.

(5131)

### நாகேந்திரம் நடராசா

ஊரெழு கிழக்கு வாசியும், கோண்டாவில் கிழக்கு வாசியும்மான நாகேந்திரம் நடராசா (ENG.) லண்டனில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் அறிவிக்கப்படும். அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

தகவல்: N. விக்கினராசா

''அருந்ததி இல்லம்''
கோண்டாவில் கிழக்கு,
பலாலிரோட்,
கோண்டாவில். (5280)

### தி. பொன்னம்பலம் (கிளாக்கர்)
(மாதகல்)

மாதகல் தி. பொன்னம்பலம் (மணியகாரர் கந்தோர், ஆனைக்கோட்டை, சங்கானை, Auditor Generals Department ஆகியவற்றில் கடமை புரிந்தவர்) காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், திருச்சிற்றம்பலம் (Supt. of Audit), இராமநாதன் (Govt. Surveyor), கணபதிப்பிள்ளை (Pharmacist), நாகராசா (Clerk) ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேஸ்வரி, விஜயலட்சுமி, தேவ லாகேஸ்வரி, சாந்திதேவி ஆகியோரின் அன்பு மாமனரும், ஜெயவிஜயா, துஷ்யந்தி, கஜேந்திரன், வாசுகி, விக்கினமோகன், சந்திரிகா, கணேசதேவா, கவாஸ்கர், கௌரிசங்கர் ஆகியோரின் அன்புப் பாட்டனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 23ஆம் திகதி காலை 10 மணிக்கு மாதகலில் நடைபெற்றது.

தகவல் :
பொ. நாகராசா

(5277)

### திரு. முத்தையா இராசையா
(காரைநகர் புதுரோட்)

காரைநகர் புதுரோட்டைச் சேர்ந்த திரு முத்தையா இராசையா அவர்கள் 23-7-88 காலை சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற முத்தையா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும், செல்வி விஜயலக்ஷ்மி, திரு. நடராசா (இளைப்பாறிய விமானப்படை அதிகாரி), டாக்டர் திருமதி கண்ணுத்துரை (கண்வைத்திய நிபுணர் யாழ் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சரோஜா நடராசா, திரு. வே.கண்ணுத்துரை (இளைப்பாறிய பாட்டா கம்பனி கொள்வனவு அதிகாரி) ஆகியோரின் அன்பு மாமனரும் செல்வி பிரபாலினி (பட்டப்படிப்புகள் கல்லூரி யாழ்ப்பாணம்), சிவாஜினி (சுண்டிக்குழி மகளிர் கல்லூரி), சுதர்சன் (பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று ஞாயிறு (24-7-88) காலை 10 மணியளவில காரைநகர் புதுரோட் இல்லத்தில் இருந்து சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: இ. நடராசா
(மகன்)

(C/5927)

இதோ!
உங்கள் பிரபல்ய போஷாக்கு நிறைந்த
லீடா
முழு ஆடைப்பால்மா
வசதியான பக்கட்களில்




விநியோகஸ்தர்கள்,
மில்லர்ஸ் லிமிடெட்
த. பெ. இல: 100,
கொழும்பு - 1

400 கிராம் பக்கட் ரூ. 38/90
1 கி. கிராம் பக்கட் ரூ. 85/=
2 கி. கிராம் பக்கட் ரூ. 162/=

லீடா இப்பொழுது ஓர்குடும்பத்தின் அங்கம்

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆறுமுகம் ஜோன் தேவராஜா
(இரசாயனவியலாளர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

தோற்றம்: 15- 9- 1912
மறைவு. 24- 7- 1983

சித்தமதிலே நின்
நினைவே வாழுதப்பா
- அது
நித்தமுமே எம் மனதை
வாட்டுதப்பா
வான சேனைத் திரளோடு
நீங்களின்று வாழுவதால்
சற்று உள்ளம்
தேறுதப்பா

மனைவி, பிள்ளைகள்,
பெத்தேல்,
[illegible]
பருத்தித்துறை.

(5122)

## ஐந்தாவது நினைவஞ்சலி



செல்வன் செந்திநாதன் ஜயேந்திரன்

ஆண்டவன் படைப்பு: 20-4-1966
ஆள்பவன் அழிப்பு: 24-7-1983

எமதினிய அன்பு மகனே! ஜயே! கற்கும் ஆசையால் கல்வி நிலையம் சென்றாய், ஆளும் அரக்கர் புத்தம் பரவிய தீவினில் பூரணை நாளில் உம்மை இடைமறித்து உமதுயிரைப் பறித்தனரே. அப்பாவி மாணவர்களைக் கொல்வதுதான் பஞ்சசீலமோ! இறைவா. இந்நாளில் உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணமார்,
அக்கா, தம்பி, மைத்துனர், மைத்துனி,

''திருவேரகம்''
சங்கானை.

( 5278 )

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷனஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 24 - 07 - 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Sunday 24th July 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org